சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்

(க.ஞானரெத்தினம், சிரேஷ்ட விரிவுரையாளர் , கல்விப்பீடம், திறந்த பல்கலைக்கழகம்)

அறிமுகம்

சுவாமி விவேகானந்தர் ஓர் அவதார புருசர். உலகம் போற்றும் மேதை. அவரைப் பற்றி எழுதுவதும், பேசுவதும் எல்லைப்படுத்த முடியாத விடயங்களாகும். தெய்வீகத் தன்மைகொண்ட சுவாமிஜீ அவர்களை நினைப்பதும், பேசுவதும், எழுதுவதும், துதிப்பதும் கிடைத்தற்கரிய பேறுகளாகும். அவரின் பெயரை உச்சரிக்கும் பொழுதே எம்முள் ஒரு சக்தி வெளிப்படுவதை நாம் உணரமுடியும். இந்த உலகத்தையே இந்தியாவின் பக்கமும் குறிப்பாக ஆத்மீகத்தின் பக்கமும் திருப்பிய ஒரு வீரத்துறவி அவர். 1863 ஆம் ஆண்டு இவ்வுலகில் அவதரித்து 39 ஆண்டுகள் மட்டுமே புனிதமான வாழ்வு வாழ்ந்து சாதனை படைத்தவர். 1893ஆம் ஆண்டு தனது முப்பது வயதில் அமெரிக்க சிக்காக்கோ நகரில் நடைபெற்ற சர்வமத மகாசபையில் இந்துமதம் சார்பில் கலந்து கொண்டு வீர முழக்கம் செய்த ஒரே ஒரு இந்து அறிஞர். குறிப்பாக இளைஞர்களுக்கு ஆத்மீக நாட்டத்தை ஏற்படுத்தி வீரம், சுயநலமின்மை, தேசபக்தி, உண்மை, ஒழுக்கம், தொண்டு போன்ற உயர் விழுமியங்களை மக்களுக்கு உபதேசித்தவர். அவரின் ஆழமான தெய்வீகச் சிந்தனைகள் எம் அனைவரையும் என்றும் வழி நடத்தும். “மக்கள் சேவையே மகேசன் சேவை“ என்பதை உணர்ந்து தனது பரமகுரு ராமகிருஷ்ண பரமஹம்சரின் பெயரில் “ராமகிருஷ்ண மிஷன்“ என்ற உயர் நிறுவனத்தைத் ஸ்தாபித்து உலகெங்கும் அதன் அளப்பெரிய சேவை தொடர வழிசமைத்தவர். அவரின் உயரிய வாழ்வு, உன்னதமான போதனைகள், அளப்பரிய சேவைகள் அனைத்தும் இன்று உலகெங்கும் போற்றப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

சுவாமி விவேகானந்தரின் உயர்ந்த நோக்கத்திற்கமைவாக ராமகிருஷ்ண மிஷன் உலகெங்கும் தனது உன்னதமான சேவைகளை செய்துகொண்டு வருகின்றது. பல்வேறு காரணிகளால் கல்வி பெறுவதற்கு வாய்பற்ற மாணவர்களுக்கு தங்குமிட வசதியுடன் கல்வி வழங்கி வருவது மிகமுக்கியமான அளவிடமுடியாத சேவையாகும். மட்டக்களப்பில் ராமகிருஷ்ண மாணவர் இல்லம் 1926 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருப்பது மகிழ்ச்சியான ஒரு விடயமாகும். இதே போன்று பல்வேறு பிரதேசங்களிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அதுமட்டுமல்ல இல்லங்களில் கல்வி கற்ற பலர் நாட்டின் பல்வேறு றிறுவனங்களிலும் உயர்பதவிகள் வகிப்பதும் பெருமைக்குரிய விடயமாகும். இதற்கு மேலதிகமாக ஆத்மீக விழிப்புணர்வு, பாலர்பாடசாலைகள், அறிநெறிப் பாடசாலைகள், பல்கலைக் கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கள், வைத்திய சேவைகள் மற்றும் இடர்கால நிவாரண உதவிகள் என பல்வேறு சேவைகளை இன மத மற்றும் பிரதேச வேறுபாடின்றி அனைவருக்கும் ராமகிருஷ்ண மிஷன் செய்து வருகின்றது. இவ் அனைத்து சேவைகளினூடாகவும் ராமகிருஷ்ண மிஷன் துறவிகள் பெரும் பங்காற்றி வருகின்றனர். இதன்

மற்றொரு அங்கமாக கொட்டகல ராமகிருஷ்ண மிஷன் ஸ்தாபிக்கட்டிருப்பது மலையக மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

கல்வியின் முக்கியத்துவம்

கல்வி மனிதனின் அடிப்படை உரிமையாகும். கல்வி உரிமையைப் பெற்றுக் கொள்வதன் மூலமே ஒரு பிள்ளை தமது ஏனைய அடிப்படை மனித உரிமைகளையும் பெற்றுக் கொள்ளமுடியும். கல்வியானது மக்களை வலுவூட்டுகிறது. அத்துடன் ஏனைய உரிமைகளை அனுபவிப்பதற்கு அடிப்படையாகவும் தவிர்க்க முடியாததாகவும் உள்ளது. கல்வி ஒருவரை ஓர் ஏணியாக உயர்த்துவதோடு தோணியாகவும் கரைசேர்க்கும். ஒருவர் கல்வி கற்பதினூடாக அவரினதும் அவரைச் சார்ந்தவர்களினுதும் சமூக பொருளாதார மற்றும் கௌரவ அந்தஸ்து உயர்வடைவும். இருட்டிலிருந்து ஒளியைப் பெறுவதற்கும் வறுமையை விரட்டி அடிப்பதற்கும் மற்றும் உலகை மாற்றியமைப்பதற்குமான ஓர் ஆயுதமாக கல்வி கருதப்படுகின்றது. இத்தகைய கல்வியின் பெருமையை எமது முன்னோர்களும் சிறப்பாக முன்வைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக விவேக சிந்தாமணி எனும் நூலின் ஒரு பாடல் இங்கு முன்வைக்கப்படுகின்றது.

''வெள்ளத்தால் போகாது வெந்தனலால் வேகாது
வேந்தராலும் கொள்ளத்தான் ஏலாது – கொடுத்தாலும்
நிறைவின்றி குறையாதது கல்வி''

சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்

“கல்வி“ தொடர்பான எண்ணக்கருக்கள் காலந்தோறும் மாறிக்கொண்டே வருகின்றன. மேலைத்தேயத் தத்துவவியலாளர்கள் கல்விக்கான பல வரைவிலக்கணங்களைத் தந்துள்ளார்கள். சம காலத்திலும் புதிய கல்விச் செல்நெறிகள் தோற்றம் பெற்ற வண்ணமுள்ளன. ஆயினும் சுவாமி விவேகானந்தரின் கல்வி தொடர்பான சிந்தனைகள் எந்த நவீன யுகத்திற்கும் பொருந்தும் வண்ணம் அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும். ”மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வி'' என்கிறார் சுவாமிஜீ அவர்கள். இதன் மூலம் ஆசிரியர்கள் எதனையும் புதிதாக மாணவர்களுக்கு கொடுக்க வேண்டியதில்லை. மாணவரிடையே அனைத்தும் மறைந்து போயுள்ளன. இவற்றை வெளிப்படுத்துவதே கல்வி எனக் கூறும் சுவாமிஜீ அவர்கள் தற்காலத்தில் பரவலாகப் பேசப்படுகின்ற “மாணவர் மையம்“ என்ற அணுகுமுறைக்கு இதன் மூலம் உயிரோட்டம் கொடுத்துள்ளார்கள். ”கல்வி என்பது ஒருவரின் மூளையில் பல விடயங்களைத் திணிப்பதன்று அப்படித் திணிக்கப்படும் அந்த விடயங்கள் நன்றாக ஜீரணமாகி பயன்படவேண்டும்” என்று சுவாமிஜீ அவர்கள் கருதுகிறார். பொய்யாமொழிப் புலவரின் ”கற்க கசடற கற்றவை கற்ற பின் நிற்க அதற்குத் தக” என்ற குறளுக்குச் சாதகமாக கற்பதினுடாக எற்படவேண்டிய நடத்தை மாற்றத்தின் முக்கியத்துவம் இதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

”நூல்களைக் கற்கலாம், சொற்பொழிவுகளைக் கேட்கலாம்: பலமணி நேரம் தொடர்ந்து பேசலாம். ஆனாலும் அனுபவமே சரியான ஆசான் அதுவே உண்மையான கல்வி” என்று கல்விக்கான மற்றுமொரு பரிணாமத்தை சுவாமிஜீ அவர்கள் முன் வைக்கின்றார்கள். இதன் மூலம் ஏட்டுக் கல்விக்கு அப்பால் அனுபவக் கல்விக்கு மிகவும் கூடிய முக்கியத்துவத்தை சுவாமிஜீ அவர்கள் கொடுக்கின்றார்கள், தற்காலத்தில் பரவலாக கல்வியாளர்களால் எதிர்பார்க்கப்படுகின்ற “திறன்’’ விருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதனை துார சிந்தனையாளரான சுவாமிஜீ அவர்கள் பல வருடங்களுக்கு முன்னரே அருளியுள்ளார்கள்.

முடிவுரை:

”அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்““ என்பதும் சுவாமிஜியின் அனுபவ சிந்தனையாகும். ஓர் ஆசிரியர், அதிபர். நிர்வாகி, குடும்பத் தலைவன், இல்லத்தரசி என்று பல பாத்திரங்களைக் கொண்டவர்களை சமூகத்தில் நாம் காண்கின்றோம். அனைவருக்கும் பல்வேறு விதமான கட்டாய பணிகள் உள்ளன. எவ்விதமான கடினமான பணியாக இருந்தாலும் கூட அதில் அன்பு வைத்து முழு மனதோடு நாம் காரியத்தில் ஈடுபட்டால் அதில் களைப்பையோ, சலிப்பையோ, வெறுப்பையோ எவரும் காணமுடியாது. மாறாக ஆனந்தத்தை அனுபவிக்க முடியும் என சுவாமிஜீ அவர்கள் கருதுகிறார். ”ஒரே ஒரு மனிதனுக்கு நல்வழியில் பயிற்சி அளிப்பதற்காக நூறாயிரம் பிறவி எடுப்பதற்கும் நான் தயாராக இருக்கின்றேன்” என சுவாமிஜீ அவர்கள் கூறியுள்ளதிலிருந்து அவர் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து எம்மை நல்வழிப் படுத்திக்கொண்டே இருப்பார்.

****